விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆனி 12 றம்ழான் 4 இதழ் 133
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26—6—82

## அமிர், சிவா இன்று லண்டன் செல்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம்.பி.யுமான திரு.மு. சிவசிதம்பரம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகிய இருவரும் இன்று பிற்பகல் லண்டன் பயணமாகின்றனர்.

லண்டனில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொண்டபின்பு அங்கிருந்து நியூயோர்க் சென்று அங்கு ஜூலை 2ம், 3ம், 4ம் திகதிகளில் நடைபெறவுள்ள தமிழ் ஈழ மாநாட்டிலும் இருவரும் கலந்துகொள்வர்.

ஏற்கனவே காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகிய இருவரும் லண்டன் பயணமானது வாசகர்கள் அறிந்ததே, அங்கிருந்து அவர்களிருவரும் ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளுக்கும் அங்குள்ள தமிழ் இளைஞர்களின் அழைப்பின்பேரில் செல்வார்கள் என தெரிய வந்துள்ளது.

திரு. மு. சிவசிதம்பரம் நியூயோர்க் நகரிலிருந்து ஜூலை 6ம் திகதி நாடு திரும்புவாரென எதிர்பார்க்கப் படுகிறது. திரு. அமிர்தலிங்கம் ஜூலை 10ம் திகதியளவில் நாடு திரும்புவாரென வும் தெரிவிக்கப்படுகிறது.

[சி—இ]

## ரூ. 3லட்சம் செலவில் கலாமண்டபம்

(புலோலி)

பருத்தித்துறை சிவன் கோவிலில் 3 லட்சம் ரூபா செலவில் கலாமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். மாநகர முதல்வர் மீது சி. ஐ. டி. விசாரணை

## வாக்குமூலமும் பதிவு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், நேற்று இரகசியப் பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டார்.**

**இவ்விசாரணை யாழ். மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 2-15 முதல் 2-45 வரை நடைபெற்றது.**

இரகசிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அதிபர் ஹரிஸ் சந்திரா, இன்ஸ்பெக்டர் கலகே ஆகியோரே முதல்வரை விசாரணை செய்ததாகத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்கள் தொடர்பாகவும் சி. ஐ. டி அதிகாரிகள் விசாரணை செய்ததாகவும், தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளுடன் உள்ள தொடர்புகள் பற்றியும் விசாரணை செய்ததாக அறியப்படுகிறது.

யாழ். மாநகர முதல்வரிடமிருந்து வாக்குமூலமொன்றும் நேற்றைய விசாரணையில் பதிவு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

## கோண்டாவிலில் குண்டுவெடிப்பு!

### மூவர் ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கைக்குண்டு வெடிப்புச்சம்பவத்தில் மூவர் பலத்தகாயமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் இருவர் ஆடிய டுவிஸ்ட் நடனத்தின் எதிரொலியே இக்குண்டு வெடிப்புச்சம்பவத்துக்குக் காரணமாயிருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர்.

ஒருவர் எட்டு நாட்களும், மற்றவர் 10 நாட்களும் டுவிஸ்ட் ஆடிமுடித்தனராம்.

இக் கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் உதயகுமார், புஷ்பரத்தினம், தங்கரத்தினம் ஆகிய மூவருமே பலத்த காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உதயகுமார் என்பவர் ஆபத்தான நிலையிலிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரன். சப் இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டினர் இது சம்பந்தமாக விசாரணை செய்து வருகின்றனர்.

[மா]

## வவுனியா கச்சேரியில் துப்பாக்கிஅறையை உடைக்க முயற்சி!

[வவுனியா]

முகமூடியுடனும் கத்திகளுடனும் வவுனியா கச்சேரிக்குள் நுழைந்த இரு இளைஞர்கள் காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு அங்கு துப்பாக்கிகள் வைக்கப்பட்டிருந்த அறையை உடைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

நேற்று இரவு வவுனியா கச்சேரிக்குள் நுழைந்த இருவர் கத்தி முனையில் காவலாளியான சுந்தரலிங்கத்தை கட்டி மலசலகூடத்தினுள் வைத்து பூட்டிவிட்டு பதிவாளர் அலுவலக அறையை சாதுரியமாகத் திறந்து அந்த அறைக்கு அருகிலிருந்த துப்பாக்கிகள் உள்ள அறையை அலவாங்கால் இடித்து உட்செல்ல முயன்றனராம்.

அப்போது தேநீர் அருந்துவதற்கு வெளியே சென்றிருந்த மற்றொரு காவலாளியான வின்சன்ட் அங்குவரவே அவ்விருவரும் தப்பியோடிவிட்டனராம்.

தமது முயற்சி தோல்வியுற்றதை அடுத்து அவர்கள் மற்றொரு அறையிலிருந்த சிறு தொகைப்பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## லொறி-சைக்கிள் விபத்தில் இளைஞர் பலி!

[புலோலி]

லொறி - சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியான சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியிலுள்ள புலோலியில் நடைபெற்றுள்ளது.

தும்பளையைச் சேர்ந்த எஸ். வரதராசா (வயது 21 என்பவரே விபத்தில் பலியானவராவார்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வயிரமுத்து மேற்கொண்டார் பருத்தித்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. சிவரத்தினம் சாட்சிகளை ஆஜ செய்தார். பருத்தித்துறை அரசினர்வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனை செய்தார். மரண விசாரணை அதிகாரி விபத்து

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மறைக் கழக 22வது மாநாடு

### இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ் மறைக் கழகத்தின் இருபத்திரண்டாவது மாநாடு இன்று தொடக்கம் 3 நாட்களுக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் ஆதரவில் நடைபெறுகிறது.

இன்று ஞானப்பிரகாச முனிவர் அரங்கில் தமிழ் மறைக் கழகத் தலைவரும், ஊர்காவற்றுறை எம் பி.யுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் மாநாடு ஆரம்பமாகின்றது.

பி. ப. 3 மணிக்கு திருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலம் யாழ்ப்பாணம் சட்டநாதர் சிவன்கோவிலிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வீதிவழியாகச் சென்று மகாநாட்டு அரங்கினை அடையும்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா மங்கல விளக்கேற்றி வைப்பார்

கோப்பாய் மகாவித்தியாலய மாணவியர் கடவுள் வாழ்த்துப்பாடுவர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சிவில் உடையில் வந்து ஹோட்டலை சேதப்படுத்தினராம்

(வவுனியா)

வவுனியாவில்உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சிவில் உடையில் வந்த கோஷ்டியினர் அக்கடையிலிருந்த கண்ணாடி அலுமாரிகளையும் தளபாடங்களையும் சேதப்படுத்தியுள்ளனராம்.

வவுனியா நகரில் உள்ள ஹோட்டலில் சிவில்உடையில் வந்த தேநீர் அருந்திய ஒருவருக்கும் ஹோட்டல்காரருக்குப் பணம்கொடுப்பதில்ஏற்பட்ட தகராற்றை அடுத்து சிறிதுநேரத்தில்அங்கு வந்த கோஷ்டியினர் கடையைச் சேதப்படுத்தினராம்.

இதுகுறித்து வவுனியா உதவிப் பொலிஸ் அதிபருக்கும் எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எம். சிற்றம்பலம் ஆகியோருக்கும் புகார்செய்யப்பட்டுள்ளது.

இந்தஹோட்டல் முன்னரும் பலதடவைகள் சேதப்படுத்தப்பட்டது. (இ)

### தவறிற்கு வருந்துகிறேம்

**சதா சகாய அன்னையின் திருத்தலம்**
**மல்லாகம் சந்தி**

நோயாளருக்கென சிறப்பு வழிபாடு: 26 சனி மாலை 5-30
வருடாந்த திருநாள் திருப்பலி:- 27 ஞாயிறு காலை 7-00

வண. ஞா. எட்மன் மைக்கல் அ. ம. தி.

3666

## இராணுவ விசாரணையில் கிராம சேவையாளர்

[சுழிபுரம்]

வலிகாமம் - மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவையாளர் ஒருவரையும் இராணுவத்தினர் விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இக்கிராம சேவையாளர் அவரது இல்லத்திலிருந்து இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

## கொழும்பில் நாளை "செம்மாங்கனி" வெளியீடு

யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூலாகிய "செம்மாங்கனி" யின் இரண்டாவது வெளியீட்டு விழா நாளை ஞாயிறு மாலை பம்டலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திரு. எஸ். சிவகுருநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

திரு. மாணிக்க லீலாவினோதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எஸ். செல்லச்சாமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலாநிதி செ. நடராசா, டாக்டர் தாசிம் அஹமது ஆகியோர் நூல் ஆய்வுரை நிகழ்த்

[8ம்பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

மேட்டார் சைக்கிள் மெக் கானிக் – நன்கு அனுபவமுள்ள வர்கள் மட்டுமே எதிர்பார்க் கும் ஊதியத்தைக் குறித்துநற் சாட்சிப்பத்திரங்களுடன் விண் ணப்பிக்கவும். 484, ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம்.

3631

வான் சாரதி – நடுத்தர வயதுள்ளவரும் வீட்டில் தங்கி யிருந்து வீட்டு வேலைகளில் உதவி செய்யக்கூடிய குடிப் பழக்கமில்லாதவர்களுமே நற் சாட்சி பத்திரங்களுடன் விண் ணப்பிக்கவும். 484, ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம்.

3632

குளிர்சாதனப் பெட்டிகள் மெக்கானிக்குகள் திருத்துவதி லும், பெயின்ற் அடித்தலிலும் நன்கு அனுபவமுள்ள மெக் கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாக சேவை செய் தால் கொழும்பு உற்பத்தி சாலையில் பயிற்சி அளிப்பதற்கு ஒழுங்கு செய்யப்படும். அனுப வத்தையும் எதிர்பார்க்கும் சம் பளத்தையும்குறித்து நற்சான் றிதழ்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 484 ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

3633

எமது தயாரிப்பான அமுத சுரபி நல்லெண்ணெயை வீடு கள் தோறும் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதி நிதிகள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க லாம். தகுந்த கமிஷன் வழங் கப்படும். விண்ணப்பங்களை இரு நற்சாட்சிப் பத்திரங்களு டன் 5-7-82 காலை 9 மணிக்கு நேரில் சமர்ப்பித்து உடன் நடைபெறும் நேர்முகப் பரீட் சையில் கலந்துகொள்ளலாம். ராஜ்வே இன்டஸ்றி, கண்டி வீதி, கைதடி. 3650

பெண் வெளிவேலைப் பணி யாளர் தேவை. விபரங்களு டன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:– விளம்பர இல:3611, மே/பா ஈழநாடு, யாழ்ப்பா ணம். 3611

## விற்பனைக்கு

சகல வசதிகளுடன் ஒன்றுக் கொன்று தொடர்பாக அமைக் கப்பட்டுள்ள நான்கு கடைகள் (ஒவ்வொரு கடையும் மூன்று அறைகளை உடையது) ஏருவூர் திருமலை வீதியில் நடைபெறும் வியாபாரத்துடன் அல்லது தனித்தனிக்கடையாகவோ அல்லது நான்கு கடையும் முழுமையாகவோ விற்கப் படும். தொடர்பு;ரேவதி மெடிக் கல் ஏருவூர், செங்கலடி. (Post)

3635

## வகுப்புகள்

Scientific Cutting and Dress Making, Cake Icing and Decoration Hair Styles and Beauty Treatment ஆகியவற் றிற்கு வகுப்புக்கள் நடை பெறுகின்றன. (குறுகிய கால வகுப்புக்களுமுண்டு) வகுப்புக் களில் சேர விரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில்(10-3) மணிக்குமிடையில் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, The Ladies Academy, இல: 4, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப் பாணம். (வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக) 3652

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற HONDA C/90, மொடல்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்ப சிவம் அன் கோ, 54 கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம்

3654

சைவ ஓட்டல் சாமான்கள் கண்ணாடி சோக்கேஸ், கண் ணாடி அலுமாரி, முதிரைப்பல கைக் கவுண்டர், மேசைகள், கதிரைகள், குசினிக்குரிய மேசைகள் பொயிலர், லொசிஞ்சர் போத்தில்கள். இலக்கம் 101, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 3659

## வாடகைக்கு

ஐந்து அறை, கோல், முன் விறுந்தை, பின்நீள விறுந்தை, மின்சாரம், குழாய் நீர், சகல வசதிகளோடும் இலக்கம் 66, நந்தாவில்லேன், கொக்குவிலில் வீடு வாடகைக்குண்டு. மேற் கண்ட விலாசதாரர் வேலா யுதபிள்ளையுடன் தொடர்பு கொள்ளவும். 3643

## பயிற்சி

செய்முறை அறிமுறையுடன் வெல்டிங், வயறிங், மோட் டார் இயந்திரவியல் பயிற்சி வகுப்பு 03-07-82 இல். நேரில் வரவும். C. E. T. ஐலண்ட் இன்ஸ்ரிரியூட் (விகாரைக்கு எதிரில்), 58, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். 3655

ஒருமாத எலக்றிக்கல் வயரிங்–வெல்டிங், மூன்றுமாத மோட்டார்மெக்கானிக்பயிற்சி 06-07-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினி யரிங் ரெக்னொலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பா ணம். 3648

## வல்வெட்டித்துறை வாடகை சபைத் தலைவர்-

(புலோலி சட்டத்தரணி சேரமசுந்தரம். சிவனருள்சுந்தரம் [காண்டீபன்] வல்வெட்டித் துறை நகர சபை பகுதியின் வாடகைச்சபைக்குத் தலைவ ராக உள்ளூராட்சி அமைச்சி னால் நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகே சன் முன்னிலையில் சத்தியப்பிர மாணம் செய்து கொண்டார்

(க)

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் பழைய பூங்கா வீதி இல. 25இல் வசித்த காலஞ்சென்ற சிவகுரு வைத்திலிங்கம் என்பவ ரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் செல்லையா கோபாலசாமி இல. 25, பழைய பூங்கா வீதி, கொய்யாத் தோட் டம், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல. 3588

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற் காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு தை மாதம் 5ம் திகதி அதற்கிணங்க முதலி லேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ள தென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 5ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
**தா. குலஞானம்,**
பதிவாளர்.

தயாரித்தவர்:
வ. முத்துக்குமாரசுவாமி,
மனுதாரின் சட்டத்தரணி.

3653

## கேள்வி அறிவித்தல்

### கோண்டாவில் கிழக்கு

### மீன் சந்தை ஆட்டிறைச்சிக்கடை

1982-ம் ஆண்டு ஆடி மாதம் 9-ந் திகதி காலை 11-00 மணி வரை மேற்படி இறைச்சிக் கடையை குத் தகைக்கு விடுவதற்கு சீல் வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உப பணிமனை கொக்குவில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தி யோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத் திரத்தின் பிரதியொன்று யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைச் செயலாளருக்கும் மறு பிரதி கொக்குவில் உப பணிமனைக்கும் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சலில் அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை யாழ். அபிவிருத்திச்சபையிலும் உப பணிமனை கொக்குவிலி லும் அறிந்துகொள்ளலாம். உத்தியோகபூர்வமான கேள்விப் படிவங்கள் 8-7-82-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உப பணிமனை கொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | ஏற்றுக்கொள்ளும் ஆகக்குறைந்த கேள்வி | கேள்வி வைப்புப் பணம் | கேள்வி பத்திரப் பணம் |
|---|---|---|---|
| ........ | .............. | ............ | ........ |
| 1. கோண்டாவில் ஆட்டிறைச்சிக் கடை | ரூ. 3400-00 | ரூ. 100-00 | ரூ. 25-00 |

**தேவநேசன் நேசையா,**
செயலாளர்,
**யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை**

அபிவிருத்திச்சபை செயலகம்,
யாழ்ப்பாணம்,
24-06-1982. (3657)

## நன்றி நவில்கின்றேம்

சுன்னுகம் புனித அந்தோனியார் ஆலயத்திருப் பணி நிதிக்காக 8-6-82 முதல் 13-6-82 வரை நடை பெற்ற கொடித்தினத்தை ஆதரித்துத் தாராளமாக நிதி வழங்கிய அன்பர்கள் அனைவருக்கும் புனித அந்தோனியார் பெயரால் நன்றி கூறுகின்றேம்.

| பங்குத்தந்தை | பொறுப்பாளர்கள் |
|---|---|
| வண. ஞா. எட்மன்மைக்கல். அ. ம. தி. | அ. அருட்பிரகாசம். அ. தாவீது. |

[3651]

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## பதவி வெற்றிடம்

பதவி: மருத்துவிச்சி பயிற்சி பெற்ற தாதி
கல்வித்தராதரம்: குறைந்த பட்சம் இரண்டு அல் லது இரண்டுக்கு குறைந்த தடவைகளில் மொழியும், எண்கணிதமும் உட்பட ஆறு பாடங்களுடன் கூடிய க. பொ. த. ப. சாதா ரண தரம்.
அனுபவம்: பிரசவ மருத்துவ பயிற்சியுடன் 2 வருட கால அனுபவம்
வயதெல்லை: 23 — 40 வரை
சம்பளம்: 225 — 395 (இத்துடன் ...................... படிகளும் 10X7 — 12.50X8 வழங்கப்படும்)

விண்ணப்ப முடிவு திகதி: 10-7-82
அனுப்பவேண்டிய விலாசம்:
பொதுமுகாமையாளர்,
**யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்**
74/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்.

(3656)

## கேள்வி அறிவித்தல் 1982

1. நயினதீவு தெற்கு இறங்கு துறைக்கும் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கும் இடையி லான பயணச் சேவை.
2. கோயில் துறைக்கும் இறுப்பிட்டி இறங்கு துறைக்கும் இடையிலான பயணச்சேவை.

யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் உப அலுவல கங்களான புங்குடுதீவு, நயினதீவு ஆகியவற்றின் பூரண ஆணைக்குட்பட்ட கடற் பிராந்தியத்தில் மேலும் இரு பயணச்சேவைகளை நடாத்துவதற்கு ஊர்காவற் றுறை தேர்தல் தொகுதி எல்லைக்குள் வதியும் படகு களைச் சொந்தமாக வைத்திருக்கும் தனி நபர்களிடம் இருந்தும், சங்கங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப் படுகின்றன. கேள்விகள் 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ம் திகதி நண்பகல் 12 மணி வரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 300/-யும், கேள்விப் பத்திரத்தின் பெறுமதியாக ரூபா 5/-யும் செலுத்தி மேற்காட்டப்பட்டுள்ள தகுதிகளை ஆவணங்கள் மூலம் நிரூபித்ததின் பேரில் புங்குடுதீவு, நயினதீவு உப அலுவலகங்களில் 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ம் திகதியிலிருந்து 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 13-ம் திகதி நண்பகல் 12 மணி வரையில் கேள் விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வோர் சேவைக்கும் தனித்தனி கேள்விகள் சமர்ப்பிக்கவேண் டும். கேள்விகள் இணைப் பிரதிகளில் நிரப்பப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் ''படகுச்சேவைக் கேள்விகள் 1982'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

சித்திகரக் கேள்விக்காரர்கள் யாழ்ப்பாணம் அபி விருத்திச் சபையினுல் நியமிக்கப்பட்ட படகுச்சேவைக் குழுவினுல் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமை வாகவும், அவர்களால் தீர்மானிக்கப்படும் கட்டணங் களை அறவிட்டு.

1. நயினதீவு தெற்கு இறங்குதுறைக்கும், குறிகாட்டு வான் இறங்குதுறைக்கும் போகப் 10 சேவைகளும் வரப் 10 சேவைகளும்.
2. கோவில் துறைக்கும் இறுப்பிட்டி இறங்குதுறைக் கும் போக 4 சேவைகளும் வர நாலு சேவைகளும் நடாத்தப்படுதல் வேண்டும்.

இக்கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ யாழ். அபிவிருத்திச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை புங்குடுதீவு, நயினதீவு உப அலுவலகங்களிலும் யாழ். அபிவிருத்திச்சபை யின் தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தே. நேசையா**
செயலாளர்,
**யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.**
அபிவிருத்திச் சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24-06-1982. 3658

# பெய்ரூட் மீது இஸ்ரேலியத் துருப்புக்கள்

# மீண்டும் தாக்குதல்!

## வெளிநாட்டுப் பிரஜைகளை வெளியேற்றவும் முயற்சி

பெய்ரூட், ஜூன் 25

தெற்குபெய்ரூட்மீது இஸ்ரேலியத் துருப்புக்கள் நேற்றிரவு மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று மூன்ருவது நாளாக இஸ்ரேலின் தரைப்படைப் பிரிவுகளும், டாங்கிகளும் இத்தாக்குதலை நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மேற்குபெய்ரூட்டின் பலபகுதிகளை இஸ்ரேலியப்படைகள் கைப்பற்றியுள்ளதாகவும்கூறப்பட்டது. மேற்கு பெய்ரூட்டை ஐ. நா. பாதுகாப்பு அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவருமாறு பிரான்ஸ் ஜனதிபதி திரு. மிட்டராண்ட் ஐ. நா. பாதுகாப்புச்சபையைக் கேட்டுள்ளார்.

லெபனனிலிருந்து இஸ்ரேலியத்துருப்புக்களை வெளியேற்றுமாறுகோரி எகிப்தியஜனதிபதி ஜனப் ஹொஸ்னிமுபாரக் அமெரிக்க ஜனதிபதி திரு. றெனல்ட் றீகனுக்கு அவசர செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

லெபனனிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் பிரஜைகளை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சிகளும் இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

லெபனன்நெருக்கடி குறித்து ஆராய்வதற்காக ஐ. நா. பாதுகாப்புச்சபையைக் கூட்டுமாறு பிரான்ஸ்சும், அணிசேரா நாடுகளும் ஐ. ந. பொதுச்செயலாளரைக் கேட்டுள்ளனர்.

இஸ்ரேலிய அமைச்சரவை நேற்றுக்கூடி லெபனன் நெருக்கடி பற்றி ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

லெபனனில் நெருக்கடி நிலை அதிகரித்ததையடுத்து அந்நடாட்டின் ஜனதிபதி சவூதி அரேபியாவின் உதவியைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெய்ரூட்டில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவமொன்றில் 3 பேர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது

அங்கு காரொன்றிற்குள் மறைமுகமாக வைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்து 12 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

### பிரதமர் இல்லம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

லண்டன் ஜூன் 25

சிம்பாப்வே பிரதமர் பீ.றெபேர்ட்முகாபேயினதும் மற்றொரு அமைச்சரினதும் இல்லங்களின் மீது இனம்தெரியாத வாலிபர்களினல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது எனினும் இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை [இ]

### கன்னடம் கட்டாய முதல் மொழி

புதுடில்லி, ஜூன் 25

கர்நாடகத்திலுள்ளஎல்லாப் பாடசாலைகளிலும் கன்னட மொழி கட்டாய முதல்மொழியாகப்போதிக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானத்தை கர்நாடக சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது. (வெ)

### போக்லண்ட் யுத்தம் பிரிட்டனுக்கு 150கோடிபவுண் செலவு

லண்டன் ஜூன்.25

போக்லண்ட்தீவுகள் யுத்தத்தினல் பிரிட்டனுக்கு 150 கோடி பவுண் ஸ்டேர்லிங் செலவுஏற்பட்டுள்ளதாக பிரிட்டனில் பாதுகாப்புக்குறித்த விபரப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டள்ளது. (வெ)

### பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் மீது குற்றச்சாட்டு

காபூல், ஜூன் 25

ஆப்கானிஸ்தானிலிருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களைக்கடத்தியதாக பிரிட்டிஷ் தொல்பொருளாராய்ச்சியாளரொருவர் மீது குற்றம்சாட்டப்பட்டு காபூல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. [வெ]

### மாகிரட்தட்சரை வர்ணித்து சவூதி மன்னர் யாத்துள்ளகவிதை

ஜெத்தா, ஜூன் 25

சவுதி அரேபியாவின் புதிய மன்னரான பஹத் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் மீது கவிதையொன்றைத் தொகுப்பித்துள்ளார். அக்கவிதையை மன்னரின் ஆஸ்தான் கவிஞர் ஒருவரே பாடியுள்ளார்.

காலஞ்சென்ற தமது சகோதரான மன்னர்காலித்துடன் கடந்தவரும் மன்னர் பஹ்த் லண்டன் சென்றிருந்தார். அப்போதே அவர் முதல் தடவையாக பிரதமர் திருமதி தட்சரைச் சந்தித்தார்.

அச்சந்திப்பிலேயே திருமதி தட்சர் தன்னைப் பெரிதும் கவர்ந்துள்ளார் என மன்னர் பஹ்வத்தெரிவித்தார். மன்னரால் திருமதி தட்சர் மீது தொகுப்பிக்கப்பட்டகவிதையின் கருத்துவருமாறு;

''வீனஸை சிற்பக்கலைஞன் உருவாக்கினன். மாக்கிரெட் தட்சரை அல்லாஹ் உருவாக்கியுள்ளான்.

அவரை முதலில் கண்டதும் என்மனம்மிகவும் குதூகலித்தது.

அவரின்சருமம் யானைத்தந்தம்போன்றுமென்மையானது.

(7-ம் பக்கம் பார்க்க)

### சோவியத் யூனியனிலிருந்து மதிப்புமிக்க உருவச்சிலைகள் வெள்ளிநாணயங்கள் கடத்தல்!

மாஸ்கோ ஜூன் .25

சோவியத் யூனியனிலிருந்து விலைமதிப்பு மிக்க உருவச்சிலைகளும், வெள்ளிநாணயங்களும் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

மாஸ்கோவிலுள்ள விமான

[7-ம் பக்கம் பார்க்க]

### பாலாவி கொலை வழக்கு

## "1-ம்எதிரி எனது கணவனின் தலையில் கொட்டனல் அடித்தார் 2-ம் எதிரி முதுகில் குத்தினர்"

### கொலையுண்டவரின் மனைவி சாட்சியம்

(சாவகச்சேரி)

''இவ்வழக்கில் இறந்த சின்னவி சின்னராசா எனது கணவர், எனக்குப் பத்துப்பிள்ளைகள் உண்டு. சம்பவதினம் நானும் கணவரும் பகல் 12 மணிவரையில் சண்முகராசா வீட்டிலிருந்தோம். சண்முகராசா என்பது எனது மூன்ருவது மகளின்கணவர் எனது மருமகன் அவர் தான் 2ம் எதிரி.

கொடிகாமம் பாலாவி கொலைவழக்கில் கொலையுண்டவரின் மனைவி சின்னப்பிள்ளை சாட்சியமளிக்கையில்இவ்வாறு கூறினர்,

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி.எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 82 ஏப்ரல் 28ல் பாலாவி கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னவி சின்னராசா என்பவரை வல்லி கணபதிப்பிள்ளை, வல்லி சண்முகநாதன் என்பவர்கள் கொட்டனல் அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம், சட்டத்தரணி சீ. பாலக்கிருஷ்ணர் என்பவர்கள் ஆஜராகினர்.

தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது சின்னப்பிள்ளை கூறியதாவது:

'எனது மகள் யசோதாதேவி கடந்த 10மாதங்களுக்கு முன் எங்கள் விருப்பத்துக்கு மாருகச் சண்முகராசாவை திருமணம்செய்தார். அன்று தொடக்கம் எங்களுக்கும் அவர்களுக்கும் நல்ல உறவில்லை. யசோதாவுக்கு விஷம் தீண்டிவிட்டதாக அறிந்து தான் 2ம் எதிரி வீட்டுக்குப் போனேம். அங்கே மகளும் 2ம் எதிரியுமிருந்தளர்.

எனது கணவனிடம் 2ம் எதிரி, சீதனம் தரவழிஇல்லாத நீங்கள், மகளைப்பார்க்க வந்துவிட்டீர்களா? என்று கேட்டார் நான் ஏதாவது சண்டை தொடங்கிவிடுமோ? எனப் பயந்து வீடுநோக்கித் திரும்பினேன். கணவரும் என்னேடு திரும்பினர் அப்போது 2ம் எதிரி ஓடிவந்து கணவரின்முதுகில் கையால் குத்தினர். அப்போது 2ம் எதிரியின் சகோதரன் ஒரு கொட்டனுடன் வந்து இரண்டு கைகளாலும் பிடித்தோங்கிஎனதுகணவரின் தலையில் ஒருதரம் அடித்தார். அவர்தான்இம்மன்றில்நிற்கும் 1ம் எதிரி அவருக்கு வேறு பெயர் இருப்பது எனக்குத் தெரியாது. அடியுடன் எனது கணவர் மயங்கி நிலத்தில் விழுந்துவிட்டார். தலையிலிருந்து இரத்தம் பாய்ந்தது அதைப்பார்த்து நான் ஐயோ எனச்சத்தமிட்டேன். அப்போது அயலிலுள்ளவர்கள் அந்த இடத்துக்கு வந்தார்கள். அடிவிழுந்ததை வந்தவர்களில் யாரும் கண்டார்களோ என்பது எனக்குத் தெரியாது. அடித்த பின்பு எதிரிகள் ஓடிவிட்டார்கள்.

நான் எனது கணவரோடு பேசிப்பார்த்தேன். அவர் பேசவில்லை. அவர் அறிவிழந்து காணப்பட்டார். எனக்கும் மயக்கமாகவிருந்தது. கொஞ்ச நேரத்தில் கார் கொண்டுவரப்பட்டது. கணவரைக் காரிலேற்றிச் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றேம். எனது மகன் விக்கினேஸ்வர மூர்த்தியும் காரில் வந்தார். அவருக்கும் தலையில் ஒருகாயம் அவரை அனுமதித்த பின் நான் வீடு திரும்பிவிட்டேன்.

அடுத்த நாள் மூன்று மணி வரையில் வந்து பொலிசார் எனதுமுறைப்பாட்டைப்பதிவு செய்து கொண்டனர். எனது கணவரை அதே தினம் இரவு யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக பின் அறிந்தேன் அடுத்த நாள் காலை எனது கணவர் இறந்துவிட்டதாகத் தெரிய வந்தது. அதன் பின்புதான் பொலிசார் என்னிடம் வாய் முறைப்பாடு எடுத்தார்கள்.

எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி ஜயசிங்கத்தின்குறுக்கு விசாரணைக்குச் சாட்சி கூறியதாவது:-

எனக்கு ஒருவரும் அடிக்கவு

(7-ம் பக்கம் பார்க்க)


உங்கள் வீட்டிற்குத் தேவையான பாவனைப்பொருட்களை

தவணைமுறையில் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- தொலைக்காட்சி (T.V.) பெட்டிகள்
- மின் விசிறிகள்
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- துவிச்சக்கர வண்டிகள்

மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்கள்!

மங்கள வைபவங்கள் வீடியோ படப்பிடிப்புச் செய்துகொடுக்கப்படும்

தொடர்புகொள்ளவும்:

முகாமையாளர்

TFC தபினன்ஸ் கம்பனி லிமிட்டெட்;

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 7680

மணிவாக்கு

''ஈதலும் இசைபட வாழ்தலும் உயிருக்கு ஊதிய மாகும்.''

— வள்ளுவர்

# நமது நோக்கு

## நியூயோர்க்கில் நடைபெறும் தமிழ் ஈழ மகாநாடு

அமெரிக்காவில் நியூ யோர்க் நகரில் எதிர்வரும் ஜூலை 3ம், 4ம் திகதிகளில் தமிழ் 'ஈழம்' தொடர்பான மகாநாடு ஒன்று நடைபெற விருக்கின்றது.

இந்தமகாநாட்டில்கலந்து கொள்ளும்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும், இளைஞர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துப் பிரசாரம் செய்துவரும் தமிழ்ஈழ விடுதலை அணியைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு அணியினரும் உள்நாட்டில் பொது மேடைகளிலும் பத்திரிகைகள் மூலமாகவும் கச்சை கட்டிக்கொண்டு முட்டி மோதிக் கொள்வதைப் பார்க்கையில் 'நியூயோர்க் மகாநாடு' வெறும் அமளி துமளியாகத்தான் முடியுமோவென்று எண்ணத் தோன்றுகின்றது.

அவ்வாறுதான் மகாநாடு முடிவுறவேண்டும் என்பதே இங்கு சில வட்டாரங்களிலும் எதிர்பார்க்கப்படுகின்றது. சில பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளில் இப்பொழுதே அதற்கான கட்டியமும் கூறப்படுகின்றது

தமிழ் ஈழத்துக்காகப் போராடும் உண்மையான அணி எது என்பதை உலக சமுதாயத்துக்கு எடுத்துக் கூறும் சந்தர்ப்பமாக இந்த மேடையை இரு தரப்பினரும் பயன்படுத்திக்கொள்ள முயல்வர்கள் என்றும் அதனால் அங்கு அமளி ஏற்பட்டு மகாநாடு பிசுபிசுத்துவிடும் என்றும் ஹேஷ்யம் கூறப்படுகின்றது.

மகாநாட்டில் கலந்து கொள்ள 22 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

'ஈழம்' கோரிக்கை தொடர்பான உலகக் கருத்தொன்றை உருவாக்குவதே இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகின்றது. இந்த நோக்கத்தை அடைவதற்கான வழிமுறைகளும், அதற்கு உலக நாடுகளில் பரந்து வாழும் தமிழ் மக்களின் ஆதரவினைப் பெறுவது பற்றியும்கூட இந்தமகாநாட்டில் ஆராயப்படக் கூடும்.

ஆனால்இலங்கையிலிருந்து செல்லும் குழுக்கள் அங்கு உள்ள தமது ஆதரவு சக்திகளைத் திரட்டிக்கொண்டு மகாநாட்டைத்தமது நோக்கங்களுக்குத் திசைதிருப்பவும், குழப்பத்துக்குள்ளாக்கவும் முனைவார்கள் என்று எண்ணுவதும் எதிர்பார்ப்பதும் பேதமை.

தமிழர் விடுதலைக் கூட்டணி— தமிழ் ஈழ விடுதலை அணி, மற்றும் இவை சார்ந்த ஏனைய பிரிவுகள் அனைத்துமே 'தமிழ்ஈழம்' அமைப்பதே தமது இலட்சியமென அறுதியிட்டுக்கூறி வருகின்றன. இந்த இலட்சியத்தில் மாற்றமே இல்லை யென்பதே தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிலையும்.

ஆனால் இந்த இலட்சியத்தை அடைவதற்கான மார்க்கம், செயல்முறைகள் குறித்தே கருத்துவேறுபாடுகளும் மோதல்களும் உருவாகியுள்ளன.

இரு தரப்பினருமே ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பொதுத் தலைமையின் கீழ் பொதுஇடமொன்றில் சந்தித்து மனம்விட்டுப் பேசினால், —பொதுநோக்கத்தின் பேரால் கௌரவப்பிரச்னைகளை விடுத்து சில அம்சங்களில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நிலைமைகளை அணுகினால், ஒன்றிணைவதும் ஒருமித்துக் குரல் எழுப்புவதும்சாத்தியமற்றதாகிவிடமுடியாது.

எம்மைப்பொறுத்தவரை தமிழ்மக்களின் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண்பதானால் அவர்கள் சிறுசிறு குழுக்களாக வக்கரிக்காமல் ஒற்றுமையுடன் நிற்கவேண்டும் என்பதையேவலியுறுத்துவோம். சமூகம் ஒன்றுபட்டு நிற்கும் நிலையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் கௌரவமாகவிருப்பதுடன் அதன்விளைவுகளும் நிரந்தரமாக நீடிக்கமுடியும்.

## சத்திய சாயிபாபா வருகை

சந்தனமும் சவ்வாதும் நிரந்தரமாய்க் கமழ்ந்து கொண்டிருக்கும் புட்டபர்த்தியில் ஆச்சிரமம் அமைத்து உம்மைக்காணவரும ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு தரிசனம் கொடுத்துத் தாழ்வகற்றியும் திவ்விய சோதியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் பகவான் சத்தியசாயிபாபா இலங்கை அரசினர் ராஜிய விருந்தினராக வருகை தரவிருப்பது இங்குள்ள சாயி பக்தர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி

புட்டபர்த்திக்கு நேரடியாகச் சென்று அவரைத் தரிசிக்க முடியாத அன்பர்கள் நேரில் தரிசிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

கொழும்போடும் கண்டியோடும பகவானின் விஜயம் முற்றுபெறுமல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கும் அவர் தரிசனம் கிடைக்கவேண்டும்.

# கோப்பாய் திருக்குறள் மாநாடு இன்று ஆரம்பம்

## வள்ளுவன் திருநாமம் என்றும் எம்மை வாழ்விப்பதாக

'தமிழுக்கு அமுதென்று பேர். அமுதம் அருந்தியவரைச் சிரஞ்சீவி ஆக்கிவிடும் தமிழர்கள் எத்தகைய இன்னல்கள் வந்தாலும் எதிர் நின்று போராடி, தமது குறிக்கோளினை இறுதியில் வென்றெடுத்துச் சிரஞ்சீவிகளாய்த் திகழ்வதற்கு அவர்களின் உயிரமுதாகிய தமிழே காரணம்.

தமிழை அமுதாக்கிச் சான்றோர் வரிசையில் முதலிடம் பெறுபவர் திருவள்ளுவர் 'மெல்லத்தமிழ் இனிச்சாகும்' என்ற அறிவிலிகளுக்கு அறை கூவல் விடுத்து ''எல்லாம் தமிழில் உண்டு, இல்லாதது இல்லை. அது அழிவதும் என்றென்றும் இல்லை'' என்று நிறுவிக் காட்டிய பெருமகன் அவர்.

### ஆ. மு. ஆலாலசுந்தரம்கோப்பாய் எம் பி.

தமிழ் தழீஇய சாயலரான பண்டிதர் சா. பொ. இரத்தினம் தமிழ்மறைக்கழகம் அமைத்து இலங்கையிலேதமிழ் கூறும் பகுதிகளிளெல்லாம் திருவள்ளுவர் தந்த திருக்குறளுக்கு விழா எடுத்துவருகின்றார். இந்த வரிசையிலே இருபத்திரண்டாவது மாநாடு எனது தொகுதியாகிய கோப்பாயிலே இவ்வாண்டு நடைபெறுவது, எனக்கும் என்தொகுதிவாழ்மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கின்றது. இப்பேற்றினை வழங்கிய பண்டிதருக்கு என் சார்பிலும மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'

நாவலர் பெருமானின் நல்லாசிரியரான இருபாலைச் சேனாதிராச முதலியார், இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, சபாபதிநாவலர், 'வித்தகம்' கந்தையாபிள்ளை முதலான பேரறிஞர்களைப் பெற்றெடுத்த தொகுதி எனது கோப்பாய்த் தொகுதி என்பதை நினைக்கையில் அளவில்லாத பெருமையும் மகிழ்ச்சியும் எனக்கு உண்டாகின்றன.

இந்தப் பெருமையும் மகிழ்ச்சியும் பொய்யா மொழிப்புலவனின் பெருவிழா நிகழும் இவ்வேளையில் உச்சகட்டத்தை அடைகின்றன என்று சொல்லவும் வேண்டுமா?

என்னுடன் தோளோடு தோள் நின்று இவ்விழாவினைச் சிறப்புற நடாத்திக்கொண்டிருக்கும் கோப்பாய்பெருங்குடி மக்களை 'வாழ்க வாழ்க' என்று வாழ்த்துகின்றேன்.

வான்மறைதந்த வள்ளுவப் பெருமானின் திருநாமம் எம் நாவிலும் நெஞ்சங்களிலும் நிலைத்துநின்று என்றென்றும் எம்மை வாழ்விப்பதாக.

### சிறப்புற வாழ்த்துவோம்

''மனித சமுதாயத்திற்கு ஒரு நீதிநூல் தந்த வள்ளுவப் பெருந்தகையாரைத் தமிழகம் உலகத்திற்கே தந்தது. அதன் கைமாறாக வள்ளுவர் உலகப் புகழை ஈட்டி தமிழினத்துக்

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## நான் பெரு மக்கள்

உலகத்திலே பல பாகங்களில் முற்போக்குள்ள அரசாங்கங்கள் கஷ்டப்படுகிற குழந்தைகளுக்கு உணவுவசதிகள் செய்து கல்வி கற்பித்து வருகின்றன. ஆனால் எமது அரசாங்கமோ வசதி குறைந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் வசதியுடையவர்களுக்கும் கல்வியும் புத்தகங்களும் இலவசமாய் வழங்குவதினால் நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதி கல்விக்கே ஒதுக்கப்பட்டு வருகிறது. இதனால் நாட்டிலுள்ள பல ஆக்கவேலைகள் பாதிக்கப்படுகின்றன.

சிறியேன் 1949ம் ஆண்டு வார்தாக் கல்வியை தொடங்கியது மாணவர்கள் தொழில் மூலம் கல்வி கற்பதினால் தன்னம்பிக்கையுடன் வளர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கேயாம். அவர்களுள் சிலர் மிகவும்கஷ்ட நிலையிருப்பதைக் கண்ட எனது தாயார் அவர்களுக்கு உணவு வசதி செய்துகல்விகற்கச் செய்தார். அரசாங்கமும் வசதிகுறைந்தவர்களுக்குஎல்லா வசதிகளையும் செய்து கொடுத்து வசதியுடையவர்களிடப் பணத்தைப் பெற்று கல்விகற்பித்து வருமாயின் கல்வியின் தரமும் குறையாது பணத்தையும் மிச்சப்படுத்தி அக்க வேலைகளைச் செய்யலாம். அரசாங்கம் பள்ளிக்கூடங்களை 60ம் ஆண்டு எடுத்தபொழுது இந்த வார்தாப்பள்ளியையும் எடுத்து நடத்தாது மூடிவிட்டபோதும் அங்கிருந்த குழந்தைகளுக்கு எனது தாயார் தொடர்ந்தும் தனது வீட்டில் வைத்திருந்து உணவு வசதிகளைச் செய்து யாழ்ற்றன் கல்லூரிக்கு அனுப்பி வந்தார். அந்தக்காலத்தில் சிறியேன் லண்டன் சர்வகலாசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்ததினால் வார்தாக்கல்வியைத் தொடர்ந்து நடத்த அரசாங்கத்தை வற்புறுத்த முடியாது போயிற்று. என்றாலும் குழந்தைகளுக்கு அந்தநாள் தொட்டு எமது பணத்தில் உணவுவசதிகள் செய்துயாழ்ற்றனுக்குஅனுப்பி வருகிறோம். போதிய பிரசாரமின்மையால் குழந்தைகள் 1981-ம் ஆண்டு வந்து சேரவில்லை. புதினப்பத்திரிகைகளில் பகிரங்கப்படுத்தியும இவ்வாண்டும் ஒருவரும் வந்து சேரவில்லை.

இந்தத்தத்துவத்தை விளங்காத காரைநகர் வடக்குக் கிராமசபை நமது குருகுலம் நடந்துவரும் எமது வீட்டை ஓர் வியாபாரதலமாகக் கருதி இவ்வாண்டு சாதாரணமான

(5ம் பக்கம் பார்க்க)

## பண்டிதமணி வாழ்த்து

தமிழ் மறைக் கழகத்தின் 22ஆவது திருக்குறள் மாநாடு மனத்துக்கண் மாசு, நீங்கி, வாழ்வாங்கு வாழ வழிகாட்டி மிளிர்வதாக என்று வாலறிவன் நற்றாள் தொழுது, வாழ்த்துவோமாக.

தேவர் குறளுந் திருநான்
மறைமுடிடம்
மூவர் தமிழும் முனி
மொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர்
சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

வள்ளுவ தேவர் திருவடி வாழ்க! வாழிய!!வாழியர்!!!

— இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை,

## பேராசிரியர் திருநாவுக்கரசு

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு அறிவு விருத்திப்பணியில் உழைப்பதில் சற்றும் இளைக்காதவர். அவரது வெளியீடுகளான நூல்களே இதற்குத் தக்கசான்றுகள். அவரது நூல்களை இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியக்கட்டுரைகள், உரையும் பதிப்பும், தொகுப்பும் பதிப்பும், மொழிபெயர்ப்பு, மொழியியல், வரலாறு, ஆங்கில நூல்கள் என்று இவ்வகையாகப் பிரிக்கலாம். வரலாற்று நூல்களில் சிந்துவெளிதரும் ஒளி, வரலாறும் வாழ்வும், தமிழர் நாகரிக வரலாறு, திராவிட இனத்தின் தோற்றம், ஒரு மறு ஆய்வு, இனமரபு வரலாறு, முதலாம் இராசராசன், வரலாற்றுவஞ்சி, இலங்கையில் தமிழ்ப்பண்பாடு என்ற நூல்களைச் சுட்டிக் காட்டலாம். பேராசிரியர் இந்தியத் தமிழ

[5ம் பக்கம் பார்க்க)

## பண்டிதர் செய்தி

திருக்கோணமலையில் 29—5—1953 ஆம் நாளன்று தமிழ் மதைக்கழகத்தின் முதலாவது திருக்குறள் மாநாடு தொடங்கியது. பின்னர் நாவலப்பிட்டி, அனுராதபுரம், வவனியா, மாத்தளை, அற்றன், கொழும்பு, கிளிநொச்சி முதலிய இடங்களிலும் நடை

[5-ம் பக்கம் பார்க்க]

## றமழான் சிந்தனை

''றமழான் மாதம் தோன்றியதும் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் விலக்கப்படுகின்றன.

ஸஹர் முடிவு: 4-22
நோன்புதிறக்கும் நேரம்; 6-28
தொகுப்பு: சுல்பிக்கா-கௌது

## மாவையாம் திருநகரில் மனமகிழக் காண்போம்

வ. குகசர்மா

அருள்பொழியும் அழகுடைய ஆறுமுக ஒளியும்
அருகசையும் குண்டல ஈராறு செவியும்
வருவினைகள் தீர்க்கவரு வனப்புடைய புயமும்
மருவுபல படைகளுடன் ஞானவடி வேலும்
சருவினிற் புகவிடாக் கமலநிகர் பதமும்
கண்டுதொழ அடியார்கள் கருணைகொள்கோலம்
மருவுபா வையருடன் வருவிழாப் பவனி
மாவையாம் திருநகரில் மனமகிழக் காண்போம்.

# 'கலைவளர்த்த செம்மல்' இன்று கௌரவிக்கப்படுகிறார்

## வடஇலங்கை சங்கீதசபை பொன்விழா சிறப்பு இசை நிகழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

''கலை வளர்த்த செம்மல்'' அமரர் டபிள்யூ. எம். குமாரசாமி அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் வடஇலங்கைச் சங்கீதசபை பொன்விழா சிறப்பு இசை நிகழ்ச்சியில், அன்னாரின் திருஉருவப் படத்தை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் திரைநீக்கம் செய்துவைப்பார்.

வட இலங்கை சங்கீதசபையின் ஆதரவில் இன்று மாலை நடைபெறவிருக்கும்இப்பொன்விழா சிறப்பு இசை நிகழ்ச்சியில்; இந்திய ஜனாதிபதியின் 1982ம் ஆண்டு சிறந்த கர்நாடக இசைக்கலைஞர்களுக்கான விருதுபெற்ற 'இசை மாமணிகள்' ராதா—ஜெயலக்ஷ்மி குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

பிரதம விருந்தினராக பராசிரியர் சு. வித்தியானந்தன் கலந்துகொள்வார்.

இப்பொன்விழா சிறப்பு இசைநிகழ்ச்சி; ஆரம்ப காலம். முதல் வடஇலங்கை சங்கீத சபையின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவரும் நீண்டகாலமாக உப தலைவராகக் கடமையாற்றி சிறப்பான முறையில் பணிபுரிந்தவருமான அமரர் டபிள்யு. எம் குமாரசாமியின் நினைவாக அர்ப்பணிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# வவனியா முத்தமிழ்விழா: தமிழ்நாடு சபாநாயகர்; ஆஸ்தான நர்த்தகி கலந்துகொள்வார்கள்

## 'மணியன்', சிலம்பொலி செல்லப்பன் ஜெய் சங்கர், விஜயகுமார் பங்குபற்றுவர்

(வவனியா)

வவனியாவில் பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழாவையொட்டி ஜூலை 16, 17, 18ல் நடைபெறும் முத்தமிழ் விழாவில், தமிழ்நாடு சபாநாயகர் திரு. ராஜாராம் கலந்துகொள்வார்.

முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்ய தமிழ்நாடு சென்று திருப்பிய வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதயம் பத்திரிகை ஆசிரியர் மணியன், விரிவுரையாளர் சிலம்பொலி செல்லப்பனும் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள் என்றும் திரு சிவசிதம்பரம் தெரிவித்தார்.

நாடக நடன நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆஸ்தான நர்த்தகி சுவர்ணமுகியும், இசைநிகழ்ச்சியில் குமாரி பிரேமளாவும் கலந்து கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சினிமா நடிகர் ஜெயசங்கர், விஜயகுமார் நடிகைகள் மஞ்சுளா, உஷா ஆகியோரும் கலந்து கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முத்தமிழ்விழா அதிவிமரிசையாக கொண்டாடுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை வவனியா மாவட்ட அபிவிருத்திச்சபை 14 வெவ்வேறு குழுக்களை நியமித்து மேற்கொண்டு வருகின்றது.

இறுதிநாளில் தேசிய மாவீரன் பண்டாரவன்னியன் சிலை வவனியா கச்சேரி முன்றலில் நிறுவப்படவிருக்கின்றது. (க)

# இன்று யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். நீதிவானுமாகிய திரு. ரி. ஜோகநாதன் கலந்துகொள்வார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி ஜோகநாதன் பரிசில்களை வழங்குவார். [சி]

# கொலைவழக்கில் எதிரிக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியமும் 500 ரூபா அபராதமும்!

(கொழும்பு)

வராக்காபொலெ கொலை வழக்கில், எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு கேகாலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 80 மே, 24-ம் தேதி வரக்காபொலையைச் சேர்ந்த எச். பி. குணசேகரா என்பவர், அவரது சகோதரரான எச். பி. பொடிநிலமையை (60 வயது) கொட்டனால். அடித்து கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஜூனியர்) சட்டத்தரணி ரெக்ஸ் குணரத்ன, சட்டத்தரணி காமினி ஹேரத் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி சுனில் சில்வா ஆஜரானார். 500 ரூபா அபராதம் கட்டத்தவறினால் 6 வார கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பளித்தார். எதிரி கைமோசக் கொலைக் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது [க]

# இன்று மாவைக்கந்தன் கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஆடி அமாவாசையன்றுதீர்த் தோற்சவமும், அதனையடுத்து பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

## இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

குருநகர் கலைக் கழகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் பாரதி நூற்றாண்டு விழாவின் இன்றைய இறுதி நாள் நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக திரு. வெ. யோகேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

இன்றைய விழாவில் புலவர் வேல்மாறன், திரு.சி.மௌனகுரு, திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன் ஆகியோர் சிறப்புரை வழங்குவர். கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை கவியரங்கு நிகழ்த்தவுள்ளார்.

இன்றைய நிகழ்ச்சிகட்குத் திரு. டோறஸ் இராசசிங்கம் தலைமை வகிப்பார். நாடக அரங்கக் கல்லூரி தயாரித்தளிக்கும் மஹாகவியின் ''கோடை'' நாடகமும் இடம் பெறவுள்ளது. (சி)

## நான்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளைக் காட்டிலும் மின் சக்திக்குறைவால் மிகவும் சிக்கனமாகப்பாவித்து வரும் மின் சாரத்திற்கு போன 2 மாசங்களுக்கும் ஆயிரம் ரூபாய் எனமதித்து கணக்கு அனுப்பியுள்ளனர். அப்படியானல் பல பிள்ளைகளைப் பெற்றுவளர்க்கும் வீடுகளுக்கு இத்தேவீதம் பணம் அறவிடப்பட வேண்டுமல்லவா? ஏனெனில் அவர்களுள் சிலர் தங்கள் மக்களின் கல்யாணத்திற்கு இனும் வாங்கியும் பெருந்தொகையான சீதனம் வாங்கியும் பெரியவியாபாரஞ் செய்து பொருளைப் பெருக்கி வருகின்றனர் ஏழைப்பிள்ளைகளுக்கு எனதுபணத்தைச் செலவுசெய்து அருளைப் பெருக்கி வரும் எனக்கு மின்சாரத்தை இனமாய் வழங்கி அருளைப் பெறுவதல்லவோ செய்யத் தக்கது! அதைவிட்டுக் கூடிய வரியைப் பெறுவது நியாயமா? இந்தவரிச்சுமையை நீக்கா விட்டால் இனிமேல் குழந்தைகளைச் சேர்ப்பதை நிறுத்தி விடத்தான் வேண்டிவரும்.

பொ. நவரத்தினம்.
வார்தாக்குருகுலம்,
காரைநகர்.

## பண்டிதர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளது. இந்த ஆண்டிலே கோப்பாயில் நடைபெறுகிறது.

அனைத்துலகிலும் ஒப்புயர்வற்ற ஞானநூல் என சேர்மனி நாட்டுப் பேரறிஞர் அல்பேட்சுவைச்சரும் காலத்தை—இடத்தை—சமயத்தைக்கடந்த நூல் என உருசிய ஆராய்ச்சி அறிஞர் அலெக்சாந்தர் டட்டிசோசுக்சியும் போற்றும் திருக்குறளைக் கற்பக மலருடன் ஒப்பிட்டார் ஒரு புலவர். மாநாட்டுக் குழு வெளியிடும் மலரும் கற்பகமலர் போலப்பொலிந்து மிளிர்ந்து உயர்ந்து ஓங்குக.

—பண்டிதர்
கா. பொ. இரத்தினம்
(பா. உ.)

## பேராசிரியர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி

கத்தில் பிறந்துவாழ்ந்துசிறந்து நின்றாலும் அத்தமிழகத்தின் ஒரு பகுதியாக நமது நாடான இலங்கையையும் எண்ணி அவ்வெண்ணத்தைப் பிரித்து நிற்கும் கடலைத் தன் கருத்தால் முறியடித்து, பிரித்து தனித்து நிற்கும் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் உள்ள பழைய, புதிய வரலாற்றுத் தொடர்பைச் சிந்தித்து எழுதிய அவரது சிந்தனைக்கு இலங்கைத் தமிழராகிய நாம் என்றும் கடமைப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும்.

—புலவர்
நா. சிவபாதசுந்தரனார்

## வள்ளுவன்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

குத் தந்துள்ளார். இப்படிப்பட்ட வள்ளுவனாரின் புகழ் பரப்பும் தமிழ் மறைக்கழகத்தின் இருபத்திரண்டாவது ஆண்டுவிழா சிறப்புறவாழ்த்துவோம்'' என்று மாநாடு கொண்டாடப்படும் கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் திரு. வி. எஸ் பாலசிங்கம் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தலை சிறந்த
மின்சார பல்புகள்

CBE பல்புகள்

வட இலங்கையின் பிரதம விநியோகஸ்தர்களாக நாம் நியமனம்பெற்றுள்ளோம். சகல வியாபாரிகளும் எம்முடன் தொடர்புகொண்டு தேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள். கம்பனி விலைகளுக்கமைய விசேட கழிவு.

மின்சார உபகரணங்களின்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

நியுரோன் எலெக்றிக்கல்ஸ்
141 - 143 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்; 7016

31°

பண விருத்தியில் 25 வருட அனுபவமுள்ள உறுதியான எமது ஸ்தாபனத்தின் பொருளாதார நிலையை முற்றாக ஆராய்ந்து முதலீடு செய்யுங்கள்.

த சென்றல் பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்

சிவன் கோவிலடி, 250, K. K. S. வீதி.
தொலைபேசி: 8360

தலைமை அலுவலகம்: 24, தலதா வீதி, கண்டி.
தொலைபேசி: 4098, 3818, 3076

எழுதுமட்டுவாள் கொலை வழக்கு:

# 'வெட்டுவிழுந்ததும்இறந்தவர் வடக்கு பக்கமாக ஓடினர்''

## காயமடைந்தவர் சாட்சியம்

(சாவகச்சேரி)

''சம்பவ தினம் வேலுப்பிள்ளை கேட்டுக் கொண்டபடி நானும் சிதம்பரநாதனும் இராசையாவின் வீட்டிற்குச் சென்று மீசாலையில் நடந்த பையன் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வேலுப்பிள்ளை வரட்டுமாம் என்றோம்''.

எழுதுமட்டுவாள் கொலை வழக்கில் சாட்சியமளிக்கும் போது அவ்வூரைச் சேர்ந்த வீரகத்தி இரத்தினகோபால் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர்முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 81 ஜூலை 20ல் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த பஸ் சாரதி சிதம்பரநாதன் என்பவரை அவ்வூர்க் கந்தன் இராசையா அல்லது சின்னத்தம்பி, சி. சுந்தரலிங்கம் என்பவர்கள் வெட்டிக்கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி பீ. சிவலோகநாதன், சட்டத்தரணி வி. செல்லத்தம்பி என்பவர்கள் சட்டத்தரணி திருமதி சுரேந்திரன் அனுசரணையுடன் ஆஜராகினா.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி சீ. பாலக்கிருஷ்ணர் பொலிஸ் சார்ஜன் வி செல்லையாவின் உதவியுடன் ஆஜரானர். தொடர்ந்து இரத்தினகோபால் சாட்சியமளிக்கும் போது குறிப்பிட்டதாவது; இராசையாவிடம் நாங்கள் சென்று வரட்டுமாம் என்று மாத்திரம்தான் சொன்னோம். இன்றைக்கு வரச் சொல்லி நாங்கள் கூறவில்லை. அவரை வாங்கோ என்று நாம்கேட்கவுமில்லை. நானோ, சிதம்பரநாதனோ இராசையாவின் வீட்டினுள் போகவுமில்லை. படலையில்தான் நின்று கூப்பிட்டோம்' இராசையாவிடம் வேலுப்பிள்ளை வரட்டுமாம் என்றதைவிட ஒரு வார்த்தையேனும் பேசவில்லை.

நான் சிதம்பரநாதனுக்குப் பின்னால் நின்றேன். கூறிவிட்டு நாங்கள் திருப்பியதும், இராசையா சிதம்பரநாதனை வெட்டினர்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி பீ. சிவலோசநாதனின் குறுக்கு விசாரணைக்கு மேலும் பதிலளிக்கையில் கூறியதாவது: இரத்தினகோபால், நீளப்பிடி போட்ட ஒரு கத்தியால் சிதம்பரநாதனை வெட்டினர். நாங்கள் இராசையாவுடன் இருக்கும்போது அவர் கையில் கத்தியில்லை. இராசையுடன் வேறு ஆட்கள் நின்றதையும் காணவில்லை. நாங்கள் ஒரு மூன்று யார் திருப்பியதும் வெட்டு விழுந்தது. நான் திரும்பி முன்னுக்குப்போகப் பின்னால் சிதம்பரநாதன் வர வெட்டு விழுந்தது. சத்தத்திற்கு நான் திருப்பிப் பார்த்தேன்.

வெட்டு விழுந்ததும் சிதம்பரநாதன் வடக்குப் பக்கமாக ஓடினர். நான் தெற்குப் பக்கமாக ஓடினேன். அதே போக்கில் நான் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். செல்லும் போது சிதம்பரநாதனை வெட்டியாச்சு என்று கத்திக் [illegible] சன்றேன். எனக்கும் ஒரு வெட்டு விழுந்தது. சற்றுத தூரம் சென்றபின் இரத்தம் வழியத்தான். அதை அவதானித்தேன். ஆனால் யார் வெட்டியது என்பது எனக்குத் தெரியாது. சிதம்பரநாதனுக்கு முதல் வெட்டுவிழுந்தது. நான் ஓட எனக்குமொரு வெட்டு விழுந்தது.

இராசையா வெட்டிய பின் துரத்திச் சென்றதாக நான் பொலிசில் கூறவில்லை. மேற்படி சம்பவம் சுமார் 7 மணி வரையில் நடந்தது. ஆனல் இராசையாவை வெளிச்சமில்லாமல் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

நீதிபதி எம்; எச். காரியப்பரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் 1ம் எதிரியை 20 வருடகாலமாகத் தெரியுமென்றும் அதேபோல் இறந்த சிதம்பரநாதனையும் 20 வருடமாகத் தெரியுமென்றும் தான் அவர்களோடு சேர்ந்து பழகவில்லையென்றும் கூறினர்.

நீதிபதி எம். எச். காரியப்பர் தொடர் விசாரணையை ஆகஸ்ட் 20 வரை ஒத்தி வைத்தார். (க)

# வெளிநாட்டு வேலை மோசடி: எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த இ. செல்வராசா என்பவரிடம் 9100 ரூபா பெற்றுக் கொண்டு வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதாக மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட அதே ஊரைச் சேர்ந்த இ. கணேசலிங்கம் என்பவர் நேற்று முன்தினம் யாழ். நீதவான் திரு ரீ. ஜோகநாதனுல் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் மீது அதே ஊரைச் சேர்ந்த மு. ஜெகஜீஸ்வரன் என்பவரிடம் 600 ரூபா பெற்றுக் கொண்டு மோசடிசெய்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டு இருந்தது. அக் குற்றச்சாட்டிலிருந்தும் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## மற்றுமொரு வழக்கு

நல்லூர் விஞயகர் வீதியில் வசிக்கும் த. செல்வராசா, யமுன வீதியில் வசிக்கும் ஞானப்பிரகாசம் சார்ல்ஸ் ஆகிய இருவரிடம் தலா 1050 ரூபா பணம்பெற்று வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதாக கூறி மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட யாழ். ஆஸ்பத்திரிவீதியைச் சேர்ந்த பா. குமாரன், பா. மகேந்திரன் ஆகிய இருவரில் இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார்,

இவ்வழக்கு நேற்று முன் தினம் யாழ். நீதவான் திரு. ரீ. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இரண்டாம் எதிரியான பா.மகேந்திரன்மீதான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் செய்யப்பட்டதையடுத்துஅவர் விடுதலை செய்யப்பட்டார். முதலாம் எதிரியான பா. குமாரன் மாதாமாதம் தலா 75 ரூபா செலுத்தும்படி நீதிபதி உத்தரவிட்டு வழக்கை அடுத்தமாதம் 22ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பொலிஸ் தரப்பில் யாழ். விசேடப் புலன்விசாரணைப் பகுதிப் பொறுப்பதிகாரி திரு. ஜி எஸ். பிள்ளை வழக்கை தாக்கல் செய்திருந்தார். (சி)

## மர்ம மரணம்

(கிளிநொச்சி)

கல்மடுவில் காலமடைந்த 12 வயதுச் சிறுவனன இராசேந்திரம் பெருமாளின் மரணம் தொடர்பான மர்மம் இன்னமும் துலங்கவில்லை. சார்ஜன்ட் கே பாலசிங்கம் தலைமையில் பொலிஸ் கோஷ்டியினர் புலன் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் [சி].

## பொதுமக்கள் பாதிப்பு

(கரவெட்டி)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலக வீதிகளில் சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள் வீதிகளிலேயே வைத்து எரிக்கப்படுவதனுல் பொதுமக்கள் பெருங் கஷ்டமும், அவதியும் அடைந்து வருகின்றனர். இம்பகுதி வீதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளில் பெரும் பகுதி வீதி ஓரங்களில் வைத்தே எரிக்கப்பட்டு வருகின்றன. இதனுல் வீதிகள் புகைமண்டலமாகக் காணப்படுவதால், பாதசாரிகள் பொதுமக்கள் போக்குவரத்துச்செய்ய முடியாமலுள்ளது.

## இளைஞர் பரிசளிப்புப் போட்டிகள்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுல் 1982-ம் ஆண்டுக்கான இளைஞர், யுவதிகள் பரிசளிப்புப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

மேடை நாடகம், நடனம், நாட்டுப்பாடல் புதுக்கவிதைப் பாடல் சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகியன தொடர்பாகவே இப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. [வெ]

## இன்றைய பலன்

ஆனி மாதம் 12-ம் திகதி

சனிக்கிழமை

(26—6—82)

மேடம்: தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப் பணியில் ஈடுபடுவீர்கள்.

இடபம்: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும். வியாபாரங்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்கும்.

மிதுனம்: பொருள் ஈட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாக சாதிப்பதில் முதல் இடத்தைப் பெறுவீர்கள். நல்ல தினம்.

கடகம்: சிந்தனை சிலந்தி வலை பின்னும். கடந்தகாலச் சம்பவமொன்று வேதனையைத் தரக்கூடும். தனிமையைப் பெரிதும் விரும்புவீர்கள்.

சிங்கம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததிலும் ஏமாற்றம் விளையும். சகோதரத்தின் உடல் நலம்பாதிக்கப்படலாம். அபாயகரமான காரியங்களை தவிர்க்கவும்.

கன்னி: கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமாக உடை அணிவதற்கு விரும்புவீர்கள். பொருள் வரவு உண்டு.

துலாம்: அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். ஆபத்து மிகவும் உண்டு. எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று. நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: இல்லத்தில் திருப்தி காணும். மோகன வாழ்வுகிட்டும். முன்னேற்ற வாழ்க்கை உண்டு. தாய்வழித் தனமும் சேரும்.

தனு: புதிய அனுபவங்கள் கிடைக்கும் புத்திரர் வழியால் புகழ் உண்டு குறிக்கோள் வெற்றி காணும். ஆனந்த நிலை தென்படும். சுபதினம்.

மகரம்: திடீர் தாக்குதல் உங்களை திகைக்க வைக்கலாம். நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்ருக இருக்கும். பிணிக்கு இடம்கொடாது நடக்கவும்.

கும்பம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள். இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர் காலத்துக்கு சிறந்த பலனை அளிக்கும். வரவேற்க வேண்டிய தினம்.

மீனம்: பேச்சு வார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசரமுடிவின் மூலம் விரோதத்தை தேடிக்கொள்வீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## ஆசிரியர்சங்க ஆண்டுக் கூட்டம்

(கரவெட்டி)

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க யாழ். கிளையின் 3-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் அடுத்தமாதம் 9-ம் திகதி யாழ். மறைக் கல்வி நிலையத்தில் நடைபெறும். திரு. ம. நீக்கிலாப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக யாழ். மறைக்கல்வி இயக்குநர் அருட். திரு. ஜே. நீக்கலஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஆர். ஜோசெவ், பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

## வருடாந்த இல்லப் போட்டி

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் திரு. இ. துரைராசா கலந்து கொள்வார். திருமதி. மகேஸ்வரி துரைராசா பரிசில்கள் வழங்குவார்.

● ● ●

உடுத்துறை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. உடுத்துறை வீரக்களி மைதானத்தில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியை பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் கொடியேற்றி ஆரம்பித்து வைப்பார். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பிரதம உடற்கல்வி அதிகாரி திரு. வே. தங்கராஜா கலந்து கொள்வார். [வெ]


# 27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான
பினன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கோத்தலாவெல. ஏ. எம். எக்ஸ். வண்டன் (தலைவர். நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர் சேனநாயக்கா ஏ எம். எக்ஸ். ஏ. வண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு. காணி கொள்வனவு. விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள். சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குதவழங்கிய இலங்கையின் முதலாவது பினன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கீட்டு மூலதனம் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டுலாபம் | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,328 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,043 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,290,000 | 1,698,335 | 41,203,537 | 8,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,180 | 1,727,524 | 57,284,462 | 1,866,699 | 145,561 | 115,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24-மாதங்கள் | 15 % வருடம் |

✦ இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

31-3-81வரை ரூபா 10கோடிக்குமேல் நிலையான வைப்புத்தொகை

# "அரசாங்கத்தின் ஆக்கபூர்மான கொள்கைகளால் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது"

## ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

"அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான கொள்கைகளினால் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. கம்யூனிஸ சித்தாந்தத்தை நான் முற்றாக நிராகரிக்கிறேன். கம்யூனிஸ் நாட்டில் வேறுகட்சிக்கு இடம் கிடையாது.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா லும் புணுகமவில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா மகாவித்தியாலயத்தை திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது: "திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தான் ஆட்சிக்கு வந்தால் விக்டோரியாத் திட்டத்திற்கும், சுதந்திர வர்த்தக வலயத்திற்கும் மூடுவிழா நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்புக்களை இழப்பார்கள். இது தான் திருமதி பண்டாரநாயக்காவின் சித்தாந்தமா?

"மக்களின் வாக்குக்களில் அரசியல் வாதிகள் தங்கியுள்ளதால் தமது தொகுதிகளில் அக்கறைகாட்டிவருகிறார்கள்" என்றார்

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்காவும் இவ்வைபவத்தில் உரையாற்றினர். [வெ]

## சங்காபிஷேக திருவுலா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தோப்புக் காடு சுப்பிரமணியர் ஆலய நவோத்தர சஹஸ்ர சங்காபிஷேகத் திருவுலா இம் மாதம் 28ம் திகதி நடைபெறவுள்ளது

இரவு சமயச் சொற்பொழிவுகளும் கலை, நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன

(மா)

## மதிப்புமிக்க...

(3-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலையமொன்றின் சுங்க அதிகாரிகளின் உதவியுடன்தான் இவை கடத்தப்படுவதாகவும் கூறப்பட்டது. இவற்றுக்காக சுங்க அதிகாரிகள் 290 டாலர்களை லஞ்சமாகப் பெற்றார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

சோவியத்யூனியனிலுள்ள பிரான்ஸ் பிரஜையொருவர் அங்கிருந்து வெள்ளிநாணயங்களைக் கடத்தமுற்பட்டபோது சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டதாகவும் கூறப்பட்டது.

சோவியத்சர்க்கஸ் குழுவின் தலைவரொருவன் வீட்டைச் சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் அங்கிருந்து 10 லட்சம் டாலர் பெறுமதியான வைரங்களையும், வெளிநாட்டு நாணய மாற்றுக்களையும் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

[வெ]

## சவூதி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் கன்னங்கள் ஆங்கிலேய ரோஜாக்களின் நிறத்தை ஒத்தவை.

கண்கள் பெண்குதிரையின் அழகிய கண்களை ஒத்தவை.

அவரின் உடலமைப்பு அன்பு காட்டிப் பராமரிக்கும் எந்தவொரு மனைவிமாரிலும் மிகவும் கவர்ச்சியானது. [கி]

## 1-ம் எதிரி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லை. எந்தவித காயமுமில்லை– ஆஸ்பத்திரிக்கு வந்தபொழுது பொலிசுக்குச் செல்ல வேண்டுமென்பதை நான் நினைக்கவில்லை. வீட்டில் சிறுபிள்ளைகள் இருப்பதால் கிராமசேவகருக்குகூட அறிவிக்க நினைக்கவில்லை. 1ம், 2ம் எதிரிகள் உடன் பிறந்த சகோதரர்கள், எனது மகளுக்குஏதாவது சொத்துக்கொடுக்குமாறு கிராமசேவகர் எங்களிடம் வந்து கேட்டார். நாங்கள் 5பரப்புக்காணியும் 5 பவுண் நகையும் கொடுக்கலாம் என்றோம். 1ம் எதிரிக்கு வேறு பெயர் இருப்பது நான் அறியேன்பொலிசாருக்குகொடுத்த முறைப்பாட்டில் வல்லி கணபதி அல்லது துரையன் என்று கொடுக்கவில்லை.

சட்: பொலிசார் உமது முறைப்பாட்டில் அப்படிப் பதிந்திருந்தால் அது பொலிஸ் உண்டாக்கியதா?– நான்துரையன் என்றுதான் கூறினேன்.

சட்: இந்தவழக்கில் துரைசிங்கம் என்பவரைப் பிடித்து விளக்கமறியலில் வைத்தது தெரியுமா?– ஆம்.

சட்: பிறகு அவரை இவ்வழக்கிலிருந்து நீக்கி விட்டது தெரியுமா?–ஆம்.

சட்; அவர் தான் துரையென்று தெரியுமா?– எனக்குத் தெரியாது.

சட்: உனது மகள் இரண்டாம் எதிரியின் மனைவி?–ஆம்.

சட்: உங்களுக்கு விருப்பமில்லாமல் திருமணம் செய்தார்?–ஆம்.

சட்: உமது கணவர் ஒரு குடிகாரன்?–

சாட்சி: அளவாக குடிக்கிறவர்.

சட்: நீங்கள் மகள் வீட்டிற்குப் போனபோது கணவன் குடித்திருந்தார்?– அதைப் பற்றித் தெரியாது.

சட்: உனது கணவர் அடிக்கடி மதுபோதையில் 2ம் எதிரியுடன் சண்டைபோடுவார்?– அப்படியில்லை.

2ம் எதிரிசார்பில் சட்டத்தரணி சீ. பாலகிருஷ்ணர் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது: நானும் எனது கணவரும் 12 மணிவரை 2ம் எதிரியின் வீட்டுக்குச் சென்றோம். அங்கே மகளும் மருமகனும் இருந்தார்கள். முதற்குத்தியது 2ம் எதிரி. பின்புதான் 1ம் எதிரி கொட்டனால் அடித்தார். நான் சத்தமிட்டபின்பு தான் சனங்கள் வந்தார்கள்.

சின்னராசா மகள் யசோதா தேவி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இந்த வழக்கில் இறந்தவர் எனது தகப்பனார். நான் அவரது மூன்றாவது மகள். நான் அவர்களோடு இருக்கும்போது கூண்டில் நிற்கும் 2ம் எதிரியை மணஞ்செய்தேன். அன்று தொட்டு எங்களோடு நல்லாயில்லை. 11 மாதங்கட்கு முன்தான் திருமணம் செய்தேன். தாயார் இடைக்கிடை வீட்டுக்குவருவார் தப்பனாரும் சம்பவதினத்திற்கு முன்னர் பார்க்கவந்தவர்

சீதனம் வாங்கிவா என்று என்னை அடிக்கடி அனுப்புவார். தாயாரும் இடைக்கிடை எங்கள் வீட்டுக்கு வருவார்.

கடைசியாசச் சம்பவதினம் தாயாரும்தகப்பனாரும்வந்தார்கள். என்னை பார்ப்பதற்காக அவர்கள் வரும்போது 2ம்எதிரியான எனது கணவர் வீட்டில் இருந்தார். வந்த இடத்தில் தகப்பனாருக்கும் கணவருக்குமிடையே சச்சரவு நடந்தது. சீதனம் தர இயலாத நீங்கள் வருத்தம் பார்க்க வந்துவிட்டீர்களா? என்று எனது கணவர் தகப்பனாரைப் பார்த்துக் கேட்டார்.

இந்நிலையில் சட்டத்தரணி ஜெயசிங்கம் 2ம் சாட்சியான மனைவி 2ம் எதிரியான கணவனுக்கு விரோதமாகச் சாட்சியமளிக்கமுடியாதென்றும் இது சம்பந்தமாக சட்டசம்பந்தமான சமர்ப்பணம் செய்ய தவணை வழங்குமாறு கோரினார்.

நீதிபதி எம். எச். காரியப்பர் 82 ஜூலை 6ம் தேதி வரை வழக்கை ஒத்தி வைத்தார். (க)

## மணிக்கூடு அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச்சங்க சனசமூகநிலையத்தில் நடைபெறும் பாலர்பாடசாலைக்கு சுவர் மணிக்கூடு ஒன்றை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா அன்பளிப்புச் செய்துள்ளார்.

## பின்னுறுதிக் கட்டளையைப் பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி காலஞ்சென்ற அம்பிகைபாகன் கைம்பெண் அன்னபூரணம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல: 3668

யாழ்ப்பாணம் அரசடி வீதி, அம்பிகைபாகன் சண்முகநாதன்

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லா மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் சொத்துக்களுக்கு நிர்வாக பத்திரம் பெறுவதற்காக தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு யூலைமாதம் 02ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி, 1982ம் ஆண்டு யூன் மாதம் 16ந் நாளன்று தேதியிடப்பட்டது.

தா. குலஞானம்,
பதிவாளர்.
3625


ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
இதயத்தில் நீ

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
சட்டம் என்கையில்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
சிவாஜி மஞ்சுளா
உத்தமன்
விரைவில்! விஸ்வரூபம்

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-00, 6-00, 9-30
The Other Side of Midnight
கொழும்பில் 100 நாட்களுக்குமேல் ஓடி ஆங்கிலப்படத்தில் கூடிய வசூலைக்கொடுத்த அதி உன்னத சித்திரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
ரஜனிகாந் சுஜாதா விஜயன் கராத்தேமணி ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
6-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா, தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

Windsor (Jaffna)
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
A long awaited Film. Action packed and full of Suspense
A Giant in His Time!
A Legend in His Death!!
He Lives Again!
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
BRUCE LEE'S First Maiden Film depicting to the World the famous Martial Arts, upto this day
There is no equal to BRUCE LEE in The Art of KUM PU.
உலக சாம்பியன் புரூஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

றீகல் யாழ். நகர்
தினசரி நான்கு காட்சிகள்
2-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி
கீதா குமாரசிங்க [இலங்கை நடிகை]
ஜெயபாரதி
பத்மபிரியா
நாகேஷ்
அனுராதா

மோகனப் புன்னகை

# ஆலயக் குருக்களுக்கு சேவைக்காலப் பணம்

## தொழில் நீதிமன்றம் தீர்ப்பு

(சாவகச்சேரி)

''விண்ணப்பதாரி ஒரு வயோதிபமடைந்த அந்தணர். அவர் தனது நாற்பது வருடசேவைக் காலத்தில் மேற்படி தேவஸ்தானத்தைச் சைவசமயநாயன்மார்கள் வெளிப்படுத்திய கருத்துப்படி முப்போதும் திருமேனி தீண்டப்பெற்றவர் ஆகவும், சலம்பூவொடு தூபம் மறந்தறியாதவராகவும் கருதப்படுபவர்.''

இவ்வாறு சாவகச்சேரியில் அமைந்துள்ள வடபிராந்திய தொழில் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். என். குருசாமி ஒரு கோவில் குருக்களின் சேவைக் காலக் கொடுப்பனவு, நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பிரதிவாதிகள் கொடுக்கத் தவறியதாலும் போதிய காரணமின்றி சமுகம் அளித்து கொடுப்பனவு செய்ய இயலாததற்கான காரணம் காட்டப்படாததாலும் செலவு காசாக ரூ. 1,000 விண்ணப்பதாரரான குருக்களுக்கு உடனடியாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டபோது குறிப்பிட்டார்.

மானிப்பாய் மருதடி விநாயக தேவஸ்தான தருமகர்த்தாக்கள் ஆகிய ஜி. இராசகாரியர், ஜி. இரத்தினராசா, ஜி. வாமதேவன், கே. விக்னராசா, கே. வன்னியசிங்கம், சு. காசிநாதன் ஆகியோருக்கு எதிராக அத்தேவஸ்தானத்தில் பூசகராகக் கடமையாற்றிய இரத்தினசபாபதிக் குருக்களினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது ஏற்கனவே 4,000 ரூபா சேவைக் காலப்பணமாக பிரதிவாதிகள் கொடுக்கவும், விண்ணப்பதாரர்பெற்றுக்கொள்ளவும் சுமுகமான தீர்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இவ் வழக்கில் விண்ணப்பதாரர் சார்பில் சட்டத்தரணி திரு. எம். ஆலாலசுந்தரம் சட்டத்தரணி திரு. இராசகாரியரின் அனுசரணையுடன் ஆஜரானார். பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார்.

நீதிபதி எஸ். என். குருசாமி தமது தீர்ப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பிரதிவாதிகள் ஏற்கனவே சுமுகமாகத் தீர்த்துக்கொண்ட தற்கமைய விண்ணப்பதாரரான இரத்தினசபாபதிக் குருக்களுக்கு 4000 ரூபா கொடுப்பனவுசெய்யத் தவறியமையாலும் நியாயமன்றத்திற்குச் சமுகமளித்துக் காரணம் காட்டாததினாலும் மேற்படி பிரதிவாதிகளுக்கு பொலிஸ் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு 21-06-82ல் மேற்படி வழக்குவிசாரணை எடுக்கப்பட்டு விண்ணப்பதார குருக்களுக்கு ஏற்கனவே பொருந்திய கொடுப்பனவாகிய ரூபா 4,000 ரூபாவைத் தவிர செலவுகாசாக 1000 ரூபா உடனடியாகக் கொடுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் நியாயமன்றத்தில் 1000 ரூபா உடனடியாகச் செலுத்தினர். கொடுப்பனவு 4000 ரூபாவுக்கும் அவர்கள் கேட்டுக்கொண்டபடி தவணை கொடுக்கப்பட்டது. [இ]

# துன்னாலை கொள்ளை எதிரிகளுக்கு சிறை

(புலோலி)

துன்னாலை கொள்ளை வழக்கில் 1-ம் எதிரிக்கு இரண்டரை வருட கடூழியச்சிறைத் தண்டனையும, 2-ம் எதிரிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு.சே.எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் துன்னாலையைச் சேர்ந்த வயிரமுத்து அருள் சிவானந்தன் என்பவரதுவீட்டு ஜன்னலை உடைத்து உட்புகுந்து 47,500 ரூபா பெறுமதியான தங்க நகைகள் உடு புடவைகளைத் திருடியதாக துன்னாலையைச் சேர்ந்த மகாலிங்கம் தம்பிராசா, பருத்தித்துறையைச் சேர்ந்த நாகமுத்து தெய்வேந்திரன் ஆகியோருக்கெதிராக பருத்தித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் சீவரத்தினம் வழக்கை நடாத்தினார்.

எதிரிகளைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் 1ம் எதிரிக்கு இரண்டரை வருடச் சிறைத்தண்டனையும் 2ம் எதிரிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6மாதச்சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். (க)

## 1வது ஆண்டு நிறைவு விழா இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி குருகுலத்தில் சைவ போதகர் பயிற்சி ஓராண்டு நிறைவுவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி 3நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

முன்னாள் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன், பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

குருகுல அதிபர் திரு. வே. கதிரவேலு விழாவிற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார் (க

இருபாலையில் திருட்டுப்போன

# நீர் இறைக்கும் இயந்திரம் கிளிநொச்சியில் மீட்பு!

## மூவர் கைது

(கிளிநொச்சி)

இருபாலையில் திருட்டுப் போன சுமார் 6,000 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தை கிளிநொச்சியில் வைத்து பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன் 3 சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

ரோந்து சுற்றிவந்த கிளிநொச்சி பொலிஸ் சார்ஜன்ட் எஸ். சுப்பிரமணியம், சார்ஜன்ட் எஸ். துரைரத்தினம் ஆகியோர் தங்களைக் கண்டு ஓட்டம்பிடித்த 3 இளைஞர்களையும் துரத்திப்பிடித்து நீர் இறைக்கும் இயந்திரத்தையும் மீட்டனர்.

சந்தேகநபர்களான வல்லி முருகன்' இராமன் சதாசிவம், முத்துக்கறுப்பன் ஐயாகண்ணு ஆகியோர் சுன்னாகம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். [க]

# மரண அறிவித்தல்

## சின்னையா நாகம்மா

திரு. சின்னையாவின் மனைவி நாகம்மா காலமானார். இவர் செல்லத்துரை, பவளம், தங்கபூபதி, லீலா ஆகியோரின் தாயாரும் செல்லத்தம்பி (யாழ் ஆஸ்பத்திரி (M. L. T, மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று சனிக்கிழமை 26-6-82 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி. ப. 4 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

555/10, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

3661

## பொங்கல் இன்று

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீநரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறுகின்றது. [இ]

## விளையாட்டுப் போட்டி இன்று

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகத் தொழிலதிபர் திரு இரத்தினம் துரைராசா கலந்துகொள்கிறார்.

# இப்படியும் நடக்கிறது

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலத் தினசரி ஒன்று விளம்பரமொன்றை பிரசுரத்துக்கு ஏற்று, பின்னர் அதனைப் பிரசுரிக்காமலே விட்டுவிட்டது!

உரிய கட்டணம் செலுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த விளம்பரம், தவறுதலாக விடப்பட்டதாக நீங்கள் கருதினால் அது பிழை!

விளம்பரம் ஒரு கருத்தரங்கு சம்பந்தப்பட்டது. விளம்பரத்தைக் கொடுத்தவர்கள்; ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம்.

விளம்பரத்தின் தலைப்பு: இலங்கையின் சித்திரவதையும் தடுப்புக் காவலும் பற்றிய கருத்தரங்கு.

சிறப்பு அம்சம் இதுதான்: விளம்பரம் பிரசுரிக்கப்படாததற்கு என்ன காரணம் என்று ஜ. உ. பா. இயக்கம் குறிப்பிட்ட பத்திரிகைநிறுவனத் தலைவரை வினவியபோது; அளிக்கப்பட்ட பதில்: ''கருத்தரங்கின் தலைப்பை மாற்றினால் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்'' என்பதுதான்!

'ஊடுருவி'

## கொழும்பில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துவர்.

'செம்மாங்கனி' வெளியீட்டாளர்களில் முதன்மையாளரான 'சமதர்ம கவிஞர்' அழகாபுரி அழகுதாசன் நன்றியுரையாற்றுவார். (மா)

## 3 லட்சம்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

ளது.

இக் கலாமண்டபத்தை திரு. வே. பாலசுப்பிரமணியம் இன்றுகாலை திறந்து வைக்கவுள்ளார். (மா)



## தமிழக பேராசிரியர்

(யாழ்ப்பாணம்]

இன்று நடைபெறும் கோப்பாய் திருக்குறள் மாநாட்டைச் சிறப்பிக்கத் தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் சென்னை உலகத்தமிழாராய்ச்சி மன்றத்தைச் சேர்ந்த துணைப் பேராசிரியர் கலாநிதி க. த. திருநாவுக்கரசு.

## தமிழ் மறை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் வரவேற்புரையும், யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன தொடக்கவுரையும் நிகழ்த்துவர். இதைத் தொடர்ந்து ஆய்வுரையும் மாநாட்டுமலர் வெளியீடும் நடைபெறும்.

'தமிழ் மறையின் சிறப்புகள்' பற்றி சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன துணைப்பேராசிரியர் கலாநிதி க. த. திருநாவுக்கரசுவும், குறளும் வாழ்வும் பற்றி அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் இரா. பாலுசாமியும் சொற்பொழிவாற்றுவர்.

'வில்லிசை மன்னர்' திரு. கே. என். கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும நடைபெறும். (மா)

## லொறி---

[1-ம் பக்கத்தொடர்ச்சி

மரணமெனத் தீர்ப்பளித்தார்.

லொறிச்சாரதியான தெல்லிப்பழை கட்டுவனைச்சேர்ந்த பரமலிங்கம் என்பவர் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதவான் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார், (க)

## துப்பாக்கி----

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தேநீர் அருந்திவிட்டு வந்த அன்ரன், சுந்தரலிங்கத்தின் கட்டுக்களை அவிழ்த்தபின் அரசாங்க அதிபர் திரு. கே சி. லோகநாதனிடம் புகார் செய்ததையடுத்து வவுனியா பொலிசாரிடமும் புகார் செய்யப்பட்டது.

பலத்த தாக்குதலுக்குள்ளான காவலாளி காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

சிங்களத் திணிப்புக்கு எதிரான போரில்
தொழில் இழந்த தியாகி
குரும்பசிட்டி க. பத்மநாதன்
நினைவுக்கூட்டம்
இன்று மாலை 5 மணி - யாழ் றிம்மர் மண்டபம்
தலைவர்:- செ. கோடீசுவரன் (சட்டத்தரணி)
பேச்சாளர்கள்: டி. எஸ் கே வணசிங்கா, ஈழவேந்தன், ஐ தி. சம்பந்தன், மு. தம்பிமுத்து, கரவைக்கிழார்
668
தமிழர் சுயாட்சிக் கழகம்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone. 389 and 8126.